# யாழ். நவீனசந்தைக்கு ரூ.25லட்சம் கடனுதவி

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாலிலாக்கி எண். 49 — மலர் 9
போன் 389 — National Tamil Daily — இதழ் 317 — தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிரைவை மார்கழி 11 ரம்ழான் 23 செவ்வாய்க்கிழமை (26-12-67)

## அரசாங்கம் வழங்குகிறது

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் நவீன மார்க்கட்டின் கட்டிடச் செலவுக்கென உள்ளூர் ஆட்சி அமைச்சு 25 லட்சம் ரூபாவை கடனாக வழங்கும்.

இப்பணத்தை அமைச்சு ஐந்து வருடங்களுக்குள் வருடமொன்றுக்கு 5 லட்சம் வீதம் மாநகரசபைக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. இதன்பிரகாரம் முதலாவது தவணைப் பணத்தை அடுக்க வருட முற்பகுதியில் மாநகர சபைக்கு அமைச்சு கையளிக்கும்.

யாழ். நகர் மத்தியில் அமையவிருக்கும் புதிய நவீன மார்க்கட்டுக்கான கட்டிட ஆரம்பவேலைகள் எதிர்வரும் பெப்ரவரியில் ஆரம்பமாடுமென எதிர்பார்க்கப்படுகிறது [வி.நி]

அளவெட்டி, திங்கள் இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தமது தொகுதிக்கு விஜயம் செய்துள்ள காங்கேசன்துறை எம். பியைச் சந்தித்துத் தமது கஷ்டங்களை விளக்கிக் கூறினர். இதுசம்பந்தமாக ஆவன செய்வதாக திரு. செல்வநாயகம் ஆசிரியர்களிடம் கூறினார்.

# வடபகுதியில் பஸ் கட்டணம்

# 25 சதமாக அதிகரிப்பு

## கோப்பாய் பாலம் ஊடாக செல்லும் பஸ்களுக்கு

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதியில் பஸ் கட்டணம் நேற்றுமுதல் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் பாலத்தின் ஊடாக, செல்லும் எல்லா பஸ்களுக்கும், 25 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாவற்குழி மதகு உடைந்ததைத் தொடர்ந்து, பஸ்கள் கோப்பாய் பாலத்தின் ஊடாக 5 மைல்கூட சுற்றிச்செல்வதனால்தான் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத்தெரியவருகிறது.

### எதிர்ப்பு

இம்மாதம் 22-ம் தேதி இப்பாதையால் செல்லும் எல்லா பஸ்களுக்கும் 20 சதம்அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல பிரயாணிகள் உடனடியாக இ.போ.ச உத்தியோகத்தர்களிடம் நேரில் சென்று எதிர்ப்புத் தெரிவித்தனராம். இதனால் இத்திட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டு, இதுபற்றி ஆலோசனை செய்வதாகவும் பிரயாணிகளுக்கு உறுதியளிக்கப்பட்டதாம். இதன் பின் பழைய கட்டணமே அறவிடப்பட்டு வந்தது. இரண்டு நாட்கள் ஆலோசனைசெய்தபின்னர், மேலும் 5 சதம் கூட்டி நேற்றுமுதல் இப்பாதையால் செல்லும் எல்லாபஸ்களுக்கும் 25சதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாம்.

### 25 சதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு, மாத்தளை, கண்டி, திருகோணமலை, அநுராதபுரம், மன்னார், தலைமன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, தருமபுரம், தாளையடி, உருத்திரபுரம், ஆழியவளை, எழுதுமட்டுவாள், கொடிகாமம், கனகன்புளியடி, சாவகச்சேரி, கச்சாய், கேரதீவு, மற்றும் சிலபஸ்களுக்கும் 25 சதமாக கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

புகையிரதகட்டணத்திலும் பார்க்க தற்போதைய பஸ் கட்டணம் கூடுதலாக உள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு புகையிரத கட்டணம் 40 சதம். தற்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு பஸ் கட்டணம் 55 சதம். இதனால் நேற்று வழக்கமாக பஸ்ஸில் செல்லும் பிரயாணிகள் பலர், புகையிரதத்தில் சென்றனர்.

### எம்.பி.க்கு புகார்

சாவகச்சேரி பகுதியிலிருந்து தினமும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பிரயாணிகள் யாழ்ப்பாணத்துக்குச் சென்

(2-ம் பக்கம் பார்க்க)

பஸ்கட்டண உயர்வுக்கு

## பஸ் பிரயாணிகள் சங்கம் பலத்த எதிர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

சிலவருடங்களுக்கு முன்னர் நாவற்குழி பாலம் திருத்தப்பட்டபோது சுமார் மூன்று வருடங்கள் பஸ்கள் கோப்பாய்ப் பாலத்தின் ஊடாகச் சென்றபொழுது பஸ் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை. ஆனால் இப்போ அதிகரிக்கவேண்டிய அவசியம் என்ன?

தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவரும் வட இலங்கை பொதுப் போக்குவரத்து சம்மேளன உப தலைவருமான திரு. சி. எம். எஸ் நாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பஸ் கட்டண உயர்வை உடனடியாக ரத்துச் செய்யும்படி இ. போ. ச, தலைவரை நேரில் சந்தித்து தூது கோஷ்டியொன்று வற்புறுத்துமென்றும் அவர் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது இம்மாதம் 5-ம் திகதி முதல்கோப்பாய் பாலத்தின் ஊடாக பஸ்கள் செல்கிறது. கடந்த 20 தினங்களாக பழைய கட்டணமே அறவிட்டு வந்தனர். திடீரென பஸ் கட்டணத்தை உயர்த்தவேண்டிய அவசியமென்ன?

சிறிமா அரசாங்கத்தின் போது இப் பாலத்தால் 3 வருடங்கள் பஸ் சேவை நடந்தபோதும் பஸ் கட்டணம் உயர்த்தப்படவில்லை தமிழர்களின் ஆதரவைப் பெற்ற தேசிய அரசாங்கத்தின் காலத்தில் பஸ் கட்டணத்தை நியாயமில்லாது உயர்த்துவது அரசாங்கத்தின் மீது தமிழ்மக்களுக்கு உள்ள நல்லெண்ணத்தைக் குறைப்பதாகும்.

கட்டண உயர்வு சபையைக் கலந்து ஆலோசிக்காமல் கட்டணத்தை உயர்த்த முடியாது. புதிய ரூட்டுக்கு மட்டுமே கட்டணத்தை உயர்த்தலாமே ஒழிய பழைய ரூட்டிற்கு உயர்த்த முடியாது. வெள்ளம் ஏற்பட்ட சமயம் யாழ்ப்பாணத்தில் பல பாதைகள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வெட்டப்பட்டதன் காரணமாக வேறுபாதைகளால் பஸ்களை செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் கட்டணம் உயர்த்தப்படவில்லை பழைய கட்டணமே அறவிடப்பட்டது.

## "பாராளுமன்றமுறையினால் எவ்வித பயனுமில்லை"

### கம்பஹா எம். பி. பேச்சு

காலி, திங்கள்

"பாராளுமன்ற ஆட்சிமுறையை நான் முற்றாக வெறுக்கிறேன். ஏனெனில், நாட்டுக்கோ, மக்களுக்கோ, பாராளுமன்றத்தினால் எந்தவித நன்மையும் செய்யமுடியாது. ஒவ்வொரு 5 வருட காலத்திலும், அரசாங்கம் வருகிறதேயொழிய எவ்வித நன்மையும் செய்வதில்லை.

காலி நகர மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் கம்பஹா எம். பி. [சுதந்திரக் கட்சி] திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நெருக்கடியான நேரத்தில் யாழ்ப்பாணத்திற்கும், கிழக்கு மாகாணத்திற்கும் தலைமை அழைத்துச் சென்ற சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சிதலைவர் திரு என். சண்முகதாசனுக்கு பாராட்டு தெரிவித்தார்.

திரு. பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது: அரசியல் உலகில் ஒரு முக்கியமான இடத்திறகு வந்துள்ளோம், நாணயக் குறைப்பு, எல்லா மக்களையும் பாதித்துள்ளது. நாட்டின் பொருளாதாரத்தையும் பாதித்துள்ளது.

இந்நாட்டு மக்களைத் தவறான வழியில் செலுத்துவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் பாராளுமன்ற முறையை இங்கு புகுத்தியது 56-ம் ஆண்டு காலஞ்சென்ற பண்டாரநாயக்கா பெரும்பான்மைபலத்துடன் ஆட்சிக்கு வந்தார். ஆனால் இலங்கை அரசியல் சட்டத்தை அவரால்மாற்றமுடியாமல்போய் விட்டது. கடந்த 20 வருடகாலமாக நாங்கள்சுதந்திரம் பெற்றபின்னர் அதேஆட்சியின்கீழ்வாழ்ந்துவருகிறோம். ஆனால் பாராளுமன்றத்தில் இங்கிலாந்திலிருக்கும் ராணி எலிஸபேத்தின் பெயரில், அங்கத்தவர்கள் சத்தியப் பிரமாணம் செய்துவருகின்றனர்.

பாராளுமன்றம் ஒரு 'பிசாசு'களின் சொர்க்கமாகும் சாதி, சமய, இன, மத, கட்சி பேதங்கள் வளர்வதற்கு பாராளுமன்ற முறைதான் காரணமாகும். மாவோ தலைமையில், மக்கள் சீனா கடந்த 18 வருடங்களாக பலவித முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி உட்பட, ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி தலைவர்களை

(6-ம் பக்கம் பார்க்க)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு

## 2,275 ஏக்கருக்கு விதை நெல் இலவசமாக கிடைக்கும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெற் பயிர்ச் செய்கையாளர்களுக்கு அரசாங்கம் 2,275 ஏக்கருக்கான விதை நெல்லை இலவசமாகக் கொடுக்க முன்வந்துள்ளது.

வடபகுதியில் மேற்குறிப்பிட்ட தொகையிலும் பார்க்க அதிகமான அளவில் நெற் பயிர்ச் சேதம் ஏற்பட்டபொழுதிலும் மேற்குறிப்பிட்ட விதை நெல்லை அரசாங்கம் நிபந்தனையின் பேரில் கொடுக்க முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் ஐந்து ஏக்கருக்குக் குறைவான நெற் பயிர்ச் செய்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், 150 ரூபாய்க்கு மேல் மாதவருமானம் உள்ள நெற்பயிர்ச் செய்கையாளருக்கும் குறிப்பாக இலவச விதை நெல் வழங்கப்படமாட்டாதெனத் தெரியவருகிறது.

ஏனைய மனுச் செய்த 150 ரூபாய் மாத வருமானத்துக்குக் குறைந்த 5ஏக்கருக்கும் அதிகமான பாதிக்கப்பட்ட நெற்பயிர்ச்செய்கையாளர்களுக்கு அதிகாரிகளின் நெற் பயிர்ச் அழிவு மதிப்பீட்டின்படி இலவச விதை நெல் வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உங்கள் அயலவரையும் உங்களைப் போலவே நேசியுங்கள்.

—யேசுநாதர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 11ம் திகதி [26-12-67]


## வியட்நாம்

கிறிஸ்மஸ் பெருநாளன்று ஒரே ஒரு நாள்மட்டும் வியட்நாமில் இருதரப்பினரும் சண்டையை நிறுத்தினர். ஜனவரி 1-ம் திகதியும், பிறகு வியட்நாம் புது வருடத்துக்கும் (தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பு) சண்டையை நிறுத்திவைக்க வியட்காங்கியரும் தெற்கு வியட்நாமும் ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. யுத்தம் முடியவில்லை என்றாலும் இவ்வித சண்டை நிறுத்தங்களுக்கு தற்காலிகமாகவாவது ஏற்பாடு செய்ய முடிந்தது குறிப்பிடத் தக்கது. இருதரப்பினருக்கும் ஏதோ ஒரு விதமான பேச்சுவார்த்தைகள் நடப்பதை இதிலிருந்து ஊகிக்க முடிகிறது.

ஆஸ்திரேலியாவிலே அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனுடன் கலந்து பேசிவிட்டுத் திரும்பிய தென் வியட்நாம் அதிபர் தங்கள் இருவருக்கும் "அநேகமான விஷயங்களில் ஒற்றுமை இருப்பதாகத் தெரிவித்தார். அப்படியெனில் சில விஷயங்களில் கருத்து வேற்றுமை இருப்பதாகவே தெரிகிறது. அவை என்ன? வியட்காங்கியருடன் சமாதானப் பேச்சுக்களை வியட்நாம் அரசாங்கம் நேர்முகமாக நடத்துவது பற்றியே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருப்பதாக சில வதந்திகள் அடிபட்டன. இதைப் பற்றிக் கேட்டதற்கு, தலைவர் வான்தியூ திட்டமான பதில் கூறாமல் மழுப்பி விட்டார்.

"மற்றக் கட்சியினர்" (வியட்காங்) தனிப்பட்ட முறையில் இரண்டு, மூன்று அல்லது ஐந்து பேர் தம்மைக் காண வந்தால் தாம் பேசத் தயாரென்றும் ஆனால் வியட்காங் முன்னணியின் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களுடன் பேச முடியாதென்றும் ஏனெனில் தாங்கள் வியட்காங்கை அங்கீகரிக்கவில்லையென்றும், சொன்னார். இதே சமயம் அப்படி வருபவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தயாரென்று தாம் ஏற்கனவே அளித்த உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்தினார். இதிலிருந்து சமாதானம் பற்றிப் பேச அவர் தயாரென்பது தெளிவாகிறது.

இன்றைய நிலையில் அமெரிக்காவின் சம்மதமின்றி தெற்கு வியட்நாம் அரசாங்கம் விரும்பினாலும் இச்சண்டையில் சமாதானம் செய்து கொள்ள முடியுமா என்பது சந்தேகம். இந்தச் சண்டை நீடிக்க நீடிக்க மற்றவர்களைவிட வியட்நாம் மக்களுக்கே நாசம் அதிகமாகும். சமாதானத்தை அவர்கள் மிக ஆவலுடன் வரவேற்பர். "எதிர்க்கட்சியினர் சமாதானம் பற்றி பேசவிரும்புவதாயின், தெற்குவியட்நாம் அரசாங்கமும் ஏழு நட்பு நாட்டு அரசாங்கங்களும் சமாதானம் பேசத் தயா"ரென்றார்.

இச்சண்டையில் மத்தியஸ்தம் பேசி சமாதானம் ஏற்படுத்தத் தாம் தயாரென்று போப்பாண்டவர் கூறியதை அதிபர் ஜோன்ஸன் ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை; புதிய சலுகைகளையும் கூறவில்லை. என்றாலும் "கண்ணியமான சமாதானம்" ஏற்படமுடியுமாயின் அதை அவர் மறுக்க முடியாது. ஏற்கெனவே இந்த யுத்தத்தில் அவருக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் கொஞ்சமல்ல. அமெரிக்காவிலும் அவருக்கு எதிர்ப்புகள் அதிகரித்துள்ளன, பணச் செலவும், உயிர்ச் சேதங்களும் கொஞ்சமல்ல. அமெரிக்காவின் நற்பெயரும் உலகில் கெடுவதாக இருக்கிறது. ஆகவே இந்தச் சகதியிலிருந்து "மானத்துடன் வெளியேற" முடியுமாயின் அதை அவர் ஏற்கனவே செய்வார் என்று கொள்ளுவது அதிக தவறாகாது.

வியட்காங் இதற்கு என்ன கூறப்போகிறது. சண்டையால் எந்தப் பிரச்சினையும் தீரமுடியாது. இதற்கு மாறாக புதிய சிக்கல்கள்தான் கிளம்புவதாகஇருக்கும். தெற்கு வியட்நாம் அரசாங்கத்துடனே, இவ்விஷயமாகக் கலந்து பேச நாலைந்து பேர்களை வியட்காங் 'தனிப்பட்ட முறையில்' அனுப்புமா அல்லது அதுவும் பிடிவாதம்காட்டி, யுத்தத்தை நீடிக்குமா? மக்களின் உயிர்களைப் பொறுத்த இவ்விஷயத்தில் இருதரப்பினரும் வீண் கௌரவங்களைப் பார்ப்பது சரியல்ல. எந்த முறையிலாவது, வியட்நாம் மக்களுக்குள்ளாகப் பேச்சுக்கள் நடந்து, சமாதானத்துக்கு ஒரு வழி பிறப்பதாயின், அதை அமெரிக்கா நிராகரிக்காதென்றே நம்புவோம்.

யாழ். மாநகரசபை பட்ஜட்

# நவீன மார்க்கட்டுக்கு ரூ. 8 லட்சம் ஒதுக்கீடு

— நமது நிருபர் எம். எஸ். துரைராசா —

யாழ்ப்பாணம். திங்கள் யாழ்ப்பாண மாநகர சபையின் 1968-ம் ஆண்டுக்குரிய புதிய வரவுசெலவுத் திட்டத்தில் சமீபத்தில் பிரதம மந்திரியால் அடிக்கல் நாட்டப்பட்ட நவீன மார்க்கட்டுக்கு 8 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றும் ஆக்கச் செலவுகளுக்கும் யாழ்ப்பாண விளையாட்டரங்கிற்கும், புதிய வீதிகள் விஸ்தரிப்பதற்கும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மதகுகள், வடிகால் ஆகியவற்றின் திருத்த வேலைகளுக்கும், யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்தின் கோபுர வேலைகளுக்கும் பொதுசன நூல்நிலையத்தின் புத்தகங்களுக்கும் அதிக அளவில் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதிய நவீன மார்க்கட்டுக்குரிய ஆரம்ப வேலைகளைத் தொடர்ந்து மார்க்கட்டுக்குரிய காணிகளில் உள்ள சிறிய கடைகள் யாவும் அகற்றப்படவுள்ளன. இக்கடைகளுக்கான புதிய கடைகளை கட்டிக் கொடுப்பதற்கு புதிய வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கடைகளுக்குரிய கட்டிடம் புதிய பஸ் நிலையத்தின் கிழக்குப்பகுதியில் அமையுமென தெரிகிறது.

அடுத்த வருடம் சேமிப்பு உட்பட மொத்த வருமானம் 4கோடியே 2 லட்சத்து 76 ஆயிரத்து 760 ரூபா எதிர் பார்க்கப்படுகிறது. மொத்தச் செலவாக 4 கோடியே 2 லட்சத்து 12 ஆயிரத்து 614 ரூபா எதிர் பார்க்கப்படுகிறது. எனவே மேலதிக நிதி 64 ஆயிரத்து 150 ரூபா எதிர் பார்க்கப்படுகிறது. மாநகர சபையின் அடுத்த வருட மொத்த வருமானத்தில் புதிய நவீன மார்க்கட்டுக்கு 8 லட்சம் ரூபாவும் ஆக்கச் செலவுகளுக்கு 11 லட்சத்து 78 ஆயிரத்து 950 ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

மற்றும் யாழ்ப்பாண விளையாட்டரங்கின திருத்த வேலைகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும் புதிய வீதிகள் விஸ்தரிப்பு வேலைகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும் புதிய கடை கட்டிடச் செலவுகளுக்கு 39 ஆயிரம் ரூபாவும் திறந்தவெளி அரங்கின் படிகள் அமைப்பு வேலைகளுக்கு 15 ஆயிரம் ரூபாவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மதகு வடிகால் ஆக்க வேலைகளுக்கு 1 லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாவும் பொதுசன நூல் நிலையத்தின் கோபுர வேலைகளுக்கு 75 ஆயிரம் ரூபாவும் நூல்நிலையத்துக்கான புத்தகங்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்துக்குரிய சகல வரிகளிலும் மாற்றம் செய்யப்படவில்லையென்றும், வழமையான வரிகளையே வரியிறுப்பாளர்கள் செலுத்தப்பட வேண்டுமெனவும் தெரிகிறது.

அடுத்த வருடத்துக்குரிய ஆக்கச் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிசென்றவருடம் ஆக்கச் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க இருமடங்காக உயர்த்தப் பட்டுள்ளது.

அடுத்த வருடம் மாநகர சபையின் மின்சார விநியோகத்தின் மூலம் 2 கோடியே 1 லட்சத்து 718 ரூபாய் வருமானமாக மதிப்பிடப் பட்டுள்ளது. செலவாக 2 கோடியே ஒரு லட்சத்து ஆயிரத்து 980 ரூபாய் எதிர் பார்க்கப்படுகிறது. மேலதிக இருப்பு நிதியாக 10 ஆயிரத்து 738 ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

## சுன்னாகம் ப. ச. முடிவு

உடுவில், திங்கள் சுன்னாகத்தில் புதிதாகஒரு பொதுஜன மலசலகூடம் அமைப்பதற்கு சுன்னாகம் பட்டினசபை முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது. தற்போது இருக்கும் பொதுசன மலகூடம் பொதுமக்களின் சுகாதார வசதிக்கு ஏற்றதாக இல்லாதிருப்பதனால் அதனை நீக்கிவிட்டு புதிதாக ஒரு மலசலகூடம் நிறுவ பட்டினசபை தீர்மானித்துள்ளது. இதற்கான கட்டிட வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன

[5-ம் கலத் தொடர்ச்சி]

மென்பதை மறக்கப்படாது.

ஃ ஃ ஃ

தண்டேர் மழுப்படையான்
மழவிடையான்
எழுகடல் நஞ்
சுண்டேபுரம் எரியச்சிலை
வளைத்தான் இமைய
வர்க்காத்
திண்டேர் மிசைநின்றான்
அவன் உறையும்திருச்
சுழியல்
தொண்டேசெயவல்லாரவர்
நல்லார்துயர் இலரே
—சுந்தரமூர்த்தி
சுவாமிகள்

[தண்டுபோன்ற மழுப்படையை ஏந்தியவனும், இளமையான இடபத்தை உடையவனும் தேவர்கள் பொருட்டு கடலினில் எழுந்த நஞ்சினையுண்டு திரிபுரங்களை எரியும்படி வில்லை வளைத்து திண்ணிய தேரின் மேல் நின்றவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளி இருக்கின்ற திருச்சுழியலில் சென்று அவனுக்குத் தொண்டு செய்யவல்லவர்கள் இன்பம் உடையவரும் துன்பம் இல்லாதவருமாவர்.]

## வடபகுதியில்.....

[1-ம் பக்க தொடர்ச்சி)

றுவருவதால் பஸ் கட்டண உயர்வு இவர்களை அதிகம் பாதித்துள்ளது. இவர்கள் தினமும், 50 சதம் அல்லது மாதம் 15 ரூபா பஸ்ஸிற்கு இனிமேல் மேலதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலையேற்படும். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்திற்கு பல பிரயாணிகள் இவ்விஷயமாகப் புகார் செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று முதல் இப்பாதையால் தனிப்பட்டவாகனங்கள் பலசேவையிலீடுபட்டன சில வான்கள் பழைய கட்டணமே அறவிட்டதாகத் தெரியவருகிறது.

வடபகுதியிலுள்ள பிரயாணிகள் சங்கங்களும் பொதுஸ்தாபனங்களும் பஸ் கட்டண உயர்வுக்கு பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

## இன்றைய பலன்

[26-12-67]
செவ்வாய்க்கிழமை
மார்கழி மீ 11 உ

நட்சத்திரம்- சித்திரை பி. ப. 1-45 மேல் சுவாதி

திதி- தசமி இரவு 8-29 மேல் ஏகாதசி

சுபநேரம்- 10-57 - 12-27

ராகுகாலம்- 3-27 — 4-57

மேஷம்- எண்ணம் போல் வாழ்வு, ஏற்றமுண்டு.

ரிஷபம்- தொழில் பிணக்கு, தொல்லைகள் அதிகம்.

மிதுனம்- தந்தையின் கருணை, தடையும் விலகும்.

கடகம்- தானியவிருத்தி தாராளசிந்தை.

சிம்மம்- பொருள் வரவு, புகழுமுண்டு.

கன்னி- பக்கத்தில் பகைவர் பாதுகாப்பு வேண்டும்.

துலாம்- போட்டித் தொல்லையில் மாட்டிக் கொள்ளாதே.

விருச்சிகம்- வாக்கில் வசீகரம், வழக்கில் வெற்றி

தனுசு- திரைமறைவில் சதி, திறமை தடைப்படும்.

மகரம்- இலக்கிய ரசனை, இசையிலும் பிரியம்.

கும்பம்- பிள்ளைப் பாசம், பிரிந்தவர், இணைவர்.

மீனம்- மறதிக்குணம், மனப்போராட்டம்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## ஐயாறன் எழுதுவது

கிறிஸ்மஸ்ஸை முன்னிட்டும் ஜனவரி புத்தாண்டுக்காகவும் பல அன்பர்கள் வாழ்த்துச் செய்திகளை அன்புடன் அனுப்பி இருக்கிறார்கள். அவர்களுக்கும் மட்டுமன்றி வாழ்த்து அனுப்பாத அன்பர்களுக்கும், எல்லா நலன்களும் ஏற்பட வேண்டுமென்று மனமார வாழ்த்துகிறேன்.

இது ஒரு மதத்தினருக்குரிய பெருநாளாக இல்லாமல் பொதுவாக ஒரு தேசிய விழாவாகவே கருதப்படுகின்றது. பல பல மதங்களைச் சேர்ந்தவர்களும் வாழ்த்துக்களை அனுப்பியுள்ளனர்.

இரு நண்பர்கள். மிக அன்னியோன்னியமாகப் பழகுகின்றனர். இடையில் இருவருக்கும் ஏதோ மனஸ்தாபம். ஒருவரையொருவர் பார்ப்பதில்லை. நேரில் சந்தித்தால் காலகதியிலாவது மனஸ்தாபம் நீங்கலாம். ஆனால் இரு சாரினரும் சந்திக்கவிரும்பவில்லை. கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு, வாழ்த்துச்செய்திகளை இருவரும் அனுப்பிக்கொண்டனர். அதைக் கண்டதும் இருவருக்கும் மனதிலிருந்த கசப்பு வெகுவாகக் குறைந்தது. நம் மனதில் கசப்பு நீங்கினால் அது எவ்வளவு நிவாரணமாக இருக்கும்! நம்மைப் பொறுத்தவரை அநேகமாக பிரச்னை தீர்ந்து விட்டதுபோல்தான்.

ஆகவே வீண் கௌரவத்தைப் பார்த்துக் கொண்டு, நேரில் சந்திக்க விரும்பாதவர்களும் இச்சமயம் வாழ்த்துக் கடிதங்களை அனுபபிவைக்கலாம். நண்பர்களுக்கு இவ்வாழ்த்துக் கடிதங்களை அனுப்புவதைவிட, நமது 'விரோதி'களுக்கு அனுப்பிவைப்பது அதிக நன்மையாகும். பழைய மனஸ்தாபங்களெல்லாம், செத்துவரும் பழைய வருடத்துடன் தீரவும் புது வருடத்தில் உலகில் நமக்கு விரோதிகளே இல்லாமல் போகவும், இது பெரிதும் வழிசெய்யும். அவ்வித நிலைமையை ஏற்படுத்திக் கொள்பவர்கள், நல்லெண்ணங்களை வளர்க்கவும், புதுவருடம் மிக மேலாக இருக்கவும் ஆவனசெய்து கொண்டவர்களாவர். 'இன்பமும் துன்பமும் தான் தர வருமே' என்பது ஆன்றோர் வாக்காகுமல்லவா?

ஃ ஃ

காரைநகர் சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையார், திருவாதிரை விழாவை முன்னிட்டு மார்கழி 21-ந் திகதிமுதல் 30-ந் திகதி வரை வழமைபோல் அன்னதானம் செய்வதாயும், அதற்கான பணம், அரிசி, காய்கறி, தேங்காய் முதலியவற்றை உதவுமாறும் விசேட வேண்டுகோள் விடுத்துள்ளனர். அன்னதானமாகிற இப்புண்ணிய காரியத்துக்கு நன்கொடைகள் ஏராளமாகக்குவியுமென்பதில் சந்தேகமில்லை. கொடுப்பவர்கள் தங்களுக்குத்தாங்களே நன்மை செய்துகொள்பவராவர். அன்னதானம் பத்து நாள் மட்டுமன்றி வருடமெல்லாம் நடக்க வேண்டும். அப்படி நடக்காவிடினும், பசி என்று யாரும் எந்த ஊரிலும் இராப்பட்டினியுடன் படுக்காமல், பசியாறக்கஞ்சியாவது கிடைக்கும்படி செய்தால், அந்த ஊரே சுபீட்சமாக இருக்கும் தனி ஒருவர் பசியால் வேதனைப்பட்டாலும் அந்த எண்ணங்கள் அந்த ஊரையே நாட்டையே பாதிக்கு

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ஜினியரிங் பட்டதாரிகள் வெளிநடப்பு செய்தனர்

## பட்டமளிப்பு விழாவிலிருந்து

புதுடில்லி, டிசம்பர் 25

நேற்று முன்தினம், இந்திய உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி பட்டம் வழங்கிய 125 என்ஜினியரிங் பட்டதாரிகள் 'எங்களுக்கு வேலை தான் வேண்டும், பிரசங்கங்கள் அல்ல'' என்று சொல்லி பஞ்சாப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாப்பந்தலிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

மத்திய கப்பல், போக்குவரத்து மந்திரி டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், தனது பத்துப்பக்க பட்டமளிப்பு விழா உரையைப்படிக்கத் தொடங்கியதும் இந்த வெளிநடப்பு நடந்தது.

வரிசையாக வெளியே சென்ற மாணவர்களைப் பார்த்து, ''வேலை பெறுவதற்கு இது வழியல்ல'' என்று டாக்டர் ராவ் கூறினார்.

மாணவர்கள் கொட்டும் மழையில் பந்தலுக்கு வெளியே நின்றுகொண்டு, ''கல்லூரிகளை மூடுங்கள், எங்களுக்கு வேலை கொடுங்கள்'' என்று கோஷித்தனர்.

மாணவர்களின் இடைமறிப்புகளுக்கிடையே டாக்டர் ராவும் தமது உரையை முடித்துவிட்டார்.

உப ராஷ்டிரபதியும் மற்றப் பிரமுகர்களும் பந்தலை விட்டுச் செல்கையில், பொலிசார் மாணவர்களைச் சுற்றி வளையமிட்டுக்கொண்டனர். மாணவர்களும் சற்று நேரத்துக்கெல்லாம் கலைந்து சென்றுவிட்டனர்.

# கடல், வானப் பிராந்தியங்களில் அமெரிக்க அத்துமீறல்கள்

## சீனாவின் கடும் ஆட்சேபம்

பீகிங், டிசெ. 25

அமெரிக்கப் போர்க்கப்பலொன்று, தனது கடற் பிராந்தியத்திலும், இராணுவ விமானமொன்று தனது வானப் பிராந்தியத்திலும் அத்துமீறிப் பிரவேசித்ததாகச் சீனா அமெரிக்காவிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

போர்க்கப்பல், இம்மாதம் 22, 23-ந் திகதிகளில் சீன நீர்ப்பிராந்தியத்தில் பிரவேசித்ததாகவும், இராணுவ விமானம் நேற்றும், அதற்கு முன் தினமும் வானப் பிராந்தியத்தில் அத்துமீறிப் பறந்ததாகவும் சீனா அறிவித்துள்ளது.

இச் சம்பவங்களையிட்டுச் சீன வெளியுறவு அமைச்சு, அமெரிக்காவிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

## 'பலாத்காரத்தால் பயனில்லை'

—இந்திரா



சாந்திநிகேதன், டிசெ. 25

இந்தியாவில் பல பாகங்களிலும் தற்போது நடந்து வரும் பலாத்காரச்சம்பவங்களையிட்டு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கவலை தெரிவித்துள்ளார்.

இங்கு, விசுவபாரதி பல்கலைக்கழகத்தில், மாணவர்கள், ஆசிரியர்களிடையே பேசுகையில், பலாத்காரத்தினால் நாட்டுக்குளவ்விதபயனும் கிடைக்காதென்றும், மாறாக, அதிகதீமையே விளையும் என்றும் பிரதமர் இந்திரா கூறினார்.

# இன ஒற்றுமைக்கென ஒரு தேசிய இயக்கம்

## மலேஷிய பிரதமர் விருப்பம்



கோலாலம்பூர், டிசெ. 25

மலேஷியாவிலுள்ள சகல இனங்களையும் பிணக்கும் ஒரு தேசிய இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் இன ஒற்றுமை நிலவ ஒத்துழைக்குமாறும், விசுவாசத்துடன் நடந்து கொள்ளுமாறும் பிரதமர் மக்களைக் கேட்டுள்ளார்.

நாட்டிலுள்ள பல்வேறு இனங்களுக்கிடையேயும் பிளவுகளை உண்டாக்கிப் பலாத்காரத்துக்கு வழி வகுக்கத் திட்டமிட்டுச் செயற்படும் இரகசிய கம்யூனிஸ்ட் இயக்கமொன்றின் நடவடிக்கைகள் பற்றித் தமது அரசாங்கம் தெரிந்துள்ளதாகக் கூறிய பிரதமர், அந்த இயக்கத்தையிட்டு எச்சரிக்கையாக நடந்து கொள்ளும்படி கூறினார்.

# பொதுக் காப்புறுதியும் தேசிய மயமாக்கப்படும்

## இந்திய துணைப்பிரதமர் தேசாய் எச்சரிக்கை

அஹமதாபாத், டிசெ. 25

பொதுக்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது வேலைகளைச் சரிவரச்செய்யாவிட்டால், அரசாங்கம் அதை தேசிய மயமாக்கிவிடும் என்று இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இங்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

உயிர்க் காப்புறுதியைத் தான் இப்போது இந்திய அரசாங்கம் தேசியமயமாக்கியுள்ள போதும், பொதுக்காப்புறுதியைத் தேசியபலமாக்கும் கொள்கையையும் அது ஏற்றுக் கொண்டுள்ளதென்பதை அவர்நினைவூட்டினார்.

## வியட்னாம்போர் நத்தார் ஓய்வு 66 சிறு நிகழ்ச்சிகள்

சைகோன், டிசெ. 25

வியட்னாம் ஓய்வின் முதல் 12 மணிநேரத்தில் 66 சிறு சம்பவங்கள் நிகழ்ந்ததென வியட்னாம், அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால், போர் ஓய்வு பெரிய அளவில் மீறப்படவில்லையெனஅவை மேலும் கூறின.

## சீன அணுகுண்டு

பீகிங், டிசெ. 25

சீனா, நேற்றுத் தனது 7-வது அணுகுண்டுப் பரிசோதனையை நடத்தியுள்ளது. கடைசியாகக் கடந்த ஜூன் மாதம் அது அணுகுண்டை ஒன்றை வெடித்தது. சீனா, தனது முதலாவது அணுகுண்டை 1964-ல் வெடிததிருந்தது.

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை. திங்.

வேலணை தபாற்கந்தோர் தபாலதிபர் திரு. இ. நாகநாதன் நுவரேலியா தபால் நிலையத்திற்கும் உதவித் தபால் அதிபர் சபாரத்தினம் கண்டி தபால்நிலையத்திற்கும் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

# நத்தார் தினத்தில் 105-வது பிறந்ததினம்

## அமெரிக்கப் பெண்மணி கொண்டாடினார்

மிஸ்ஸிஸிப்பி, டிசெ. 25

அமெரிக்காவில், மிஸ்ஸிஸிப்பிக் கருகேயுள்ள நகரொன்றில் ஒரு பெண், இம்முறை நத்தாருடன் தனது 105-வது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.

இப்பெண், 1862-ம் ஆண்டில், நத்தார் தினமன்று பிறந்தார். இப்போது 105 வயதை எட்டிப்பிடித்துள்ள இப் பெண், தமது நத்தார் கொண்டாட்டத்துக்குத் தமது 9 பேரப் பிள்ளைகளையும், 29 பூட்டப் பிள்ளைகளையும், 3 கொப்பாட்டப் பிள்ளைகளையும அழைத்திருந்தார்.

## வியட்னாம் பற்றி ஜோன்சன்



வாஷிங்டன், டிசெ. 25

அமெரிக்க மக்களுக்கு விடுத்துள்ள ஒரு நத்தார் செய்தியில், வியட்னாம் போரில் ஒரு நியாயமான தீர்வு ஏற்படுத்த வழிசெய்யும் பேச்சுவார்த்தைகளை ஹனோயுடன் ஆரம்பிக்க தாம் எப்போதும் தயாராக விருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் கூறியுள்ளார்.

### மேற்கு வங்காளத்தில்

# கைக்குண்டு வெடித்து 3 பொலீசார் காயம்

கல்கத்தா, டிசெ. 25

மேற்கு வங்காளத்தில், ஓர் இடத்தில், நேற்று ஒரு கைக்குண்டு வெடித்ததன்விளைவாக மூன்று பொலிஸ்காரர் காயமுற்றனர். இதுசம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

வடகல்கத்தாவில் சீன வெடி எறியப்பட்ட சம்பவம் ஒன்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ஒருவரும் காயப்படவில்லை.

# கிரீஸ் மன்னரின் விசேஷ தூதுவர்

## சமரச முயற்சிக்கு அதென்ஸ் வந்தார்

அதென்ஸ், டிசெ. 25

ரோமிலுள்ள கிரீஸ் மன்னர் கொன்ஸ்டன்டைனின் விசேஷ தூதுவர் ஒருவர், மன்னருக்கும் கிரீசின் தற்போதைய ஆட்சியாளருக்குமிடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துமுகமாகச் சமரசம்பேச அதென்ஸ் வந்துள்ளார். இவர்இரண்டாவது தடவையாக அதென்ஸ் வந்துள்ளார்.

ஆட்சியாளருடன் தாம் நடத்தும் பேச்சுவார்த்தைகள் பயனளிக்கும்வகையில் நடந்துகொண்டிருப்பதாகத் தூதுவர் தெரிவித்தார்.

## கி. வா. ஜ. வுக்கு பரிசு

சென்னை, டிசெ. 25

இந்திய சாகித்திய அகடெமியின் 1967-ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியத் துறைப்பரிசு கி. வா. ஜகந்நாதனின் 'வீரர் உலகம்' என்ற நூலுக்குக் கிடைத்துள்ளது.

# இந்திய உள்துறை மந்திரி சவாணின் தமிழக விஜயம்

## ஆட்சி மொழி மசோதாவை மாணவர்களிடம் விளக்குவார்

புதுடில்லி, டிசெ. 25

இந்திய உள்துறை மந்திரி திரு. சவாண், தமிழ் நாட்டுக்கு நேரில் விஜயம் செய்து, மாணவர்களைச் சந்தித்து, ஆட்சிமொழி திருத்த மசோதாவின் முழு விளைவுகளையும் அவர்களிடம் விளக்குவாரெனத் தெரிகிறது.

இத்தகவலை வெளியிட்ட பார்லிமெண்டரி காங்கிரஸ் கட்சி உதவி பிரதம கொறடா திரு. ஆர். டி. பார்த்தசாரதி, அடுத்த ஆண்டு ஜனவரி பிற்பகுதியில் சென்னைக்கு விஜயம் செய்யத் திரு சவாண் ஒப்புக்கொண்டதாகக்கூறினார். சென்னை நகருக்கு மட்டுமின்றி, சேலம், கோவை போன்ற வேறு சில முக்கிய நகரங்களுக்கும் திரு. சாவண் விஜயம்செய்வார்.

### மீன்பிடி இன்ஸ்பெக்டருக்கு

## புதிய உத்தரவு

காங்கேசன்துறை, திங்.

மீன்பிடி நிலையங்களில் வேலைசெய்யும் மீன்பிடி இன்ஸ்பெக்டர்களுக்குபுதிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மீன்பிடி இன்ஸ்பெக்டர் அனைவரும் அவ்வப் பகுதி மீன்பிடி நிலையங்களுக்கு அருகாமையில் இருக்க வேண்டுமென்ற உத்தரவை மீன்பிடி இலாகா டைரக்டர் கொடுத்துள்ளார். இப் புதிய நிபந்தனை ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப் படும்.

## பௌத்த காங்கிரஸ் மகாநாடு

காலி, திங்கள்

இம்மாதம் 28-ம் 30-ம் 31-ம் திகதிகளில் காலியில் அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் 49-ம் வருடாந்த மகாநாடுநடைபெறும். தலைவர் திரு. எச். டபிள்யூ. அமரசூரியா தொடக்கவுரையைநிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மபரிபாலன சபை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ். சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் தர்மபரிபாலனசபையின் 32-வது வருடாந்தக் கூட்டம் திரு. வை. செல்லையா தலைமையில் கூடியது. புதுவருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ஆ. நல்லதம்பி, தலைவர்: வை. செல்லையா, உபதலைவர்கள்: திருவாளர்கள் ஆ. சண்முகராசா, செ. சின்னத்துரை, செயலாளர்: திரு. வ. கந்தசாமி, உப செயலாளர்: திரு. மு. க. இரத்தினவேலுப்பிள்ளை, பொருளாளர்: திரு. அ. சங்கரன்பிள்ளை, உப பொருளாளர்: R. V. சுப்பையா. நிர்வாக சபை அங்கத்தவர்கள் 17 பேர். திருப்பணிச்சபையின் தலைவராக திரு. S. சேதுராமலிங்கம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். (நி)

## பிரிவுபசாரம்

சுழிபுரம், திங்கள்

வடபகுதி உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தினர் இம்மாதம் 30-ந் திகதி கீரிமலையில் ஒரு பிரிவுபசாரம் நடாத்தவிருக்கின்றனர்.

## மலேரியா தடுப்பு நிலையம் மூடப்படும்?

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த ஐந்து வருடகாலமாக இயங்கி வந்த மலேரியாத்தடுப்புப் பரிசிலனை நிலையம் இம்மாதம் 26-ந் திகதியுடன் மூடப்படவிருக்கிறது இப்பரிசிலனைத் தடுப்பு நிலையத்தின் அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ஜி. இளையதம்பி தம்பலகாமத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையாலேயே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

## பரிசளிப்பு விழா

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை பஜனைச் சபையினர் நடாத்திய சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு இம்மாதம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறும் பஜனை விழாவின்போது பரிசில்கள் வழங்கப்படும்.

## இரு ஆசிரியர் நியமனம்

புன்னாலைக்கட்டுவன், திங்கள்

திரு. எஸ். சச்சிதானந்தன் ஹாட்லிக்ஸ் கல்லூரியில் மேலதிக விலங்கியல் ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார். ஏற்கனவே இப்பாடசாலையில் விலங்கியல் ஆசிரியர் ஒருவர் கடமையாற்றி வருகிறார். இவ்வாண்டு டிப்ளோமா பரீட்சையெடுத்த திரு. சச்சிதானந்தன் முன்னாள் வடமாநில வித்தியாதிபதி ஒருவரின் சகோதரனாவார்.

கிளிநொச்சி ப. ச. தேர்தல்

## ஜனவரி 13-ந் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இம்மாதம் 29-ந் திகதி நடைபெறவிருந்த கிளிநொச்சி பட்டினசபைத் தேர்தல் அன்றைய தினம் பொது விடுமுறையாக பிரகடனப்படுத்தப் பட்டதால் ஜனவரி மாதம் 13-ந் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது. இதன்காரணமாக 1-1-68 தொடக்கம் இயங்கவிருந்த பட்டினசபை ஜனவரி 16-ந் திகதி தொடக்கம் செயற்படும்.

புனிதவதி கொலை வழக்கு

## 2-வது எதிரி பிணையில் செல்ல அனுமதி

குரும்பசிட்டி, திங்கள்

தொல்புரம் புனிதவதி கொலைவழக்கில் 2-வது எதிரியான பி. சுவாமிநாதனும் ரூபா 1000 பிணை செலுத்தி செல்ல மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ் நொத்த சிங்கா அனுமதியளித்துள்ளார் முதல் எதிரியை மட்டும் தொடர்ந்து ரிமாண்டில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி வழக்கு மேல்விசாரணையை ஜனவரி மாதம் 6-ம் திகதிவரை பின்போட்டுள்ளார்.

நேற்றைய தினம் புனிதவதி கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தாமோதரம்பிள்ளை சிவராசா என்ற 19 வயது மாணவன் தொடர்ந்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். குறுக்கு விசாரணை முடிவுற்றதையடுத்து இரண்டாம் எதிரியையும் பிணையில் விடக்கோரி வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் மனு ஒன்றை சமர்ப்பித்தார் மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி மேற்படி உத்தரவை வழங்கினார்.

இக்கொலைவழக்கின் முக்கிய சாட்சியான கிருஷ்ணபிள்ளை சுவாமிநாதன் என்ற வாலிபர் சங்கானைப் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தார், நேற்றைய விசாரணையின்போது இச்சாட்சி வழக்கறிஞர் திரு. எஸ் நடராசா மூலம் நீதிமன்றத்தில் ஆஜரானார். நீதிபதி இவரை ரூபா 200 பிணையில் செல்ல உத்தரவிட்டு அடுத்த தவணையின்போது ஆஜராகும்படி கட்டளையிட்டார். இவ் வழக்கில் மேலும் நான்கு சாட்சிகள் சாட்சியமளிக்க விருப்பதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ் வருடம் அக்டோபர் மாதம் 4-ம் திகதி தொல்புரத்தைச்சேர்ந்த ஏ. கிருஷ்ணபிள்ளை அல்லது மாயவன், பி. சுவாமிநாதன், ரி. திருநாவுக்கரசு, என். தவராசா, ரி. ஜெயச்சந்திரன் டி. விநாயகம் ஆகிய ஆறு வாலிபரும் அதேயிடத்தைச் சேர்ந்த புனிதவதி கைம்பெண் சுப்பிரமணியம் வயது 45 என்ற பெண்மணியைக் கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே செல்வரத்தினம் திரு. கே. குணரத்தினத்தின் உதவியுடன் ஆஜராகியுள்ளார். சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஸி. டயஸ் வழக்கை நடத்தினார்.

இவ்வழக்கில் 3-ம், 4-ம் 5-ம் 6-ம் எதிரிகள் ஏற்கனவே பிணையில் விடப்பட்டுள்ளனர்.


# பயிர்ச் செய்கைக்கு உதவும் டிராக்டர் சாரதி இவர்






நெல் முதலான உணவுப பொருள்களுக கெல்லாம் எங்கள் நாட்டு மக்கள் எப்பொழுதும் பிற நாடுகளையே நம்பியிருக்கும் நிலை மாற வேண்டும் இலங்கையின் பல பாகங்களிலும் கிடக்கின்ற காடுகளை அழித்து, நிலம் திருத்தி உழுது புண்படுத்திப் பயிர்ச் செய்கை செய்வதற்காக நாள் முழுவதும் தூங்காமல் உழைப்பவர் இவர் இவரும் இவரைப் போன்ற பிறரும் அயராமல் உழைத்தால், இலங்கை பழையபடி கிழக்கு நாடுகளின் தானியக் களஞ்சியம் என்னும் நிலைக்கே வந்து விடும் இந்த வகையில் உழைக்கின்ற இவரது பணி எவ்வளவு முக்கியமானது.

ஓயாது உழைப்பவர்கள், முயற்சியால் உயர்ந்தவர்கள், முன்னேறிச் செல்பவர்கள் எல்லோரும் — மணத்துக்கும் குணத்துக்குமாக — எப்பொழுதும் விரும்பிப் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்.

# இவரும் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்

L.T. 2-67 AJNS


வடமராட்சி

## மிருகவைத்தியசாலை அச்சுவேலிக்கு மாற்றமுயற்சி?

உடுப்பிட்டி, திங்கள்

பருத்தித்துறை, புலோலி ஓராங்கட்டையடியில் பலகாலமாக இருந்துவரும் வடமராட்சி மிருகவைத்தியசாலையை விரைவில் அச்சுவேலிக்கு மாற்றுவதற்கு முயற்சிகள் நடந்துவருவதாக அறியப்படுகிறது. இத்தகவல் வடமாராட்சி விவசாயிகளுக்குப் பெரும் அதிர்ச்சியைக்கொடுத்துள்ளது. பருத்தித்துறையிலிருந்து அச்சுவேலிக்கு இம்மிருகவைத்தியசாலையை இடமாற்றும் இம்முயற்சிக்கு வடமராட்சியிலுள்ள சகல இளம் விவசாயிகள் சங்கங்களும், கால்நடைகாரர்களும், பொதுமக்களும் பலத்த எதிர்ப்புத்தெரிவித்து வருவதாகவும் அறிய வருகிறது. வடமராட்சியில் இம்மிருகவைத்தியசாலையை தொடர்ந்து நடத்துவதற்கு போதியவசதியுடன் கூடிய முடிக்குரிய காணி இல்லாமையே இச்செயலுக்குக்காரணம் எனத் தெரியவருகிறது.

இம்மிருக வைத்தியசாலையை எச்சந்தர்ப்பத்திலேனும் எங்கும் மாற்றக்கூடாதென்றும் தொடர்ந்து வடமராட்சியிலேயே இயங்க வேண்டுமென்றும், இந்நிலையத்தை அச்சுவேலிக்கு மாற்றினால் வடமாரட்சி விவசாயிகள் பெரும் கஷ்டமும், நஷ்டமுமடைவர் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக உடுப்பிட்டி எம். பி, திரு. மு. சிவசிதம்பரத்திடம் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## "அதிகாரத்தை பயன்படுத்தி காணிகளை கைப்பற்றுகின்றனர்"

சங்கானை, திங்கள்

"மந்திரிமார்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்திடம் முடிக்குரிய காணிகளைத் தாங்கள் விவசாயம் செய்வதற்கு பெற்றுக்கொண்டபொழுது பொதுமக்கள் மனதில் அதிக குழப்பம் ஏற்பட்டது. இவ்விடயம் பாராளுமன்றத்தின் சர்ச்சைக்குள்ளானபொழுது பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கா இதுபற்றி தன்னுடைய கவனத்திற்கு எடுத்துக்கொள்வதாகத்தெரிவித்தார். கச்சேரிகளிலும் காணிப்பகுதிகளிலும் மற்றும் இலாகாக்களிலும் முக்கியமான பதவிகளைவகிக்கும் சில அரசாங்க ஊழியர் தாங்கள் வகிக்கும் அதிகாரத்தைப்பயன்படுத்தி [illegible]தப்பகுதிகளில் விவசாயத்திற்கு ஏற்ற நல்ல காணிகள் இருக்கின்றன வோ அவைகளை இலகுவில் கைப்பற்றிக்கொள்ளுகின்றனர். இச்சலுகைகள் ஒரு சாதாரண மனிதனுக்கு மறுக்கப்படுகின்றது. இதனுல் காணிகளைப் பெறும் பொதுமக்கள் விவசாயத்திற்கேற்ற நல்ல காணிகளைப்பெறவசதி கிடைப்பதில்லை.

எனவே அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட காணிகள்பற்றி விசாரணை செய்யும்படியும், விசாரணை செய்யவும் அவ்வாறுபலவிதமான அதிர்ச்சி தரக்கூடிய சம்பவங்களை எதிர்பார்க்கலாம்."

சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வாவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஏல விற்பனை

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்திற்குரிய பின் வரும் பொருள்கள் 28-12-67 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அவ் விடத்தில் ஏலத்தில் விற்கப் படும.

1. வெற்றுச் சாக்குகள்.
2. நீர் இறைக்கும் யந்திரம்.
3. வெற்றுத் தகரங்கள்.
4. 2, 1 1/2 இஞ்சிப் பைப்புகள்.
5. ஸ்பிறேயர் 2.

காரியதரிசி,
அ. ப. நோ. கூ. ச.

அளவெட்டி,
22-12-67. 392

### யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் திணைக்களம்

### மாணவர் பிரவேசம்—

**ஜனவரி 1968**

க. பொ. த. 'உயர்' விஞ்ஞானம் 'ஆங்கிலமும்' 1968 பரீட்சைக்கு.

க. பொ. த. 'உயர்' விஞ்ஞானம் 'தமிழ் மொழி மூலம்' 1969 பரீட்சைக்கு.

விண்ணப்பப் பத்திரங்களையும் வேறு விபரங்களையும் பெற விரும்புவோர் -/50சத தபாற் கட்டளையுடன் சொந்த விலாசம் எழுதப் பட்ட முத்திரையொட்டிய தபாலுறையுடன் பதிவாளருக்கு 27-12-67 தொடக்கம் 9-1-68 வரை விண்ணப் பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 9-1-1968.

பதிவாளர்.
வட்டுக்கோட்டை. 383

உதைபந்தாட்டம்

## வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், செவ். நல்லூர் அரசடி ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற சினேகித பூர்வமான உதைபந்தாட்ட மோதலில் இரு சாராரும் ஆட்டம் முடியும் வரையும் சமபலத்துடன் மோதியதால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ரசிப்பாகவே காணப்பட்டது.

இப்போட்டிக்கு திரு. சி. கோபாலகிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [வி. நி]

## உதைபந்தாட்ட கழக தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்துக்கு நிரந்தரமான நிலையம் ஒன்று தேவையென்றும், அது சங்கம் தனது செயலைச் சீர்படச்செய்ய உதவியாக இருக்குமென்னும் பிரேரணையை அடுத்த மாதம் 7-ம் திகதி நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டக்கழக வருடாந்த மகாநாட்டில் புனிதவளன் கழகத்தினர் சமர்ப்பிக்க விருக்கின்றனர்.

தற்போதுள்ள கௌரவ கணக்குப் பரிசோதகருக்குப் பதிலாக நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட ஒரு கணக்குப்பரிசோதகரை வேதனத்துக்கு நியமிக்கவேண்டுமென்னும் மற்ருெரு தீர்மானத்தையும் மேற்படி கழகத்தினர் சமர்ப்பிக்கவுள்ளனர். (நி)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

சுழிபுரம், திங்கள் வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் நடைபெறும் போட்டியுடன் ஆரம்பமாகின்றன போட்டிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இச்சுற்றுப் போட்டியில் ஆறு கழகங்கள் கலந்து கொள்கின்றன.

## தீப்பெட்டி விற்க மறுத்தவருக்கு ரூபா 60 அபராதம்

குரும்பசிட்டி, திங்கள் சுன்ஞகத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தமது கணவரின் வியாபாரநிலையத்தில் 18 தீப்பெட்டிகளை கையிருப்பில் வைத்துக் கொண்டு விற்கமறுத்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேர்சி விஜயசூரியாவினுல் மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து மாஜிஸ்திரேட் ரூபா 60 அபராதப் பணம் செலுத்த உத்தர விட்டு தீர்ப்பளித்தார்.

———

சுழிபுரம், ஞாயிறு பண்ணுகம் மெய்கண்டான் பெண்கள் கிராமமுன்னேற்றச்சங்க நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-


போஜகர் திரு. செ. ஸ்ரீநிவாசன். தலைவர். செல்வி சு. உமாதேவி, காரியதரிசி இ. கமலாதேவி, தனதிகாரி சி. நல்லம்மா. நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.




தலைவலி, தடிமல், டெங்குச் சுரம், காய்ச்சல், பல்வலி, இவற்றிலிருந்து துரிதமான, பாதுகாப்பான, வன்மையான நிவாரணம் தந்து, தசைநார் வலிகள் நோவுகளைத் தணிப்பது டிஸ்பிரின்.

டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், நிச்சயமாகவே வன்மையான பாதுகாப்பான நிவாரணம் தந்திருக்கின்றன. அதனுல் தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிருர்கள்.

டிஸ்பிரின், முற்ருகக் கரைவதும் இரத்தோட்டத்தில் உடனே செறிவதுமாகையால், அதி துரித நிவாரணம் தருகிறது.




ரேக்கிட் அன்ட் கோல்மன் தயாரிப்பு.

RC 165

## வரி விளம்பரம்

### காணவில்லை

கூப்பன்

U. P. 702 No P 783934 என்ற இலக்கம்கொண்ட கூப்பன் தொலைந்துவிட்டது. கண்டு எடுத்தால் தயவு செய்து கீழ்குறிக்கப்பட்ட விலாசத்திற்குக் கொண்டு வந்துதரவும். சன்மானம் வழங்கப்படும். A. கதிரவேலு, நிலஅளவைப்பகுதிக் கந்தோர், பழைய கச்சேரி, யாழ்ப்பாணம். 2006

### கல்வி

இலங்கையில் தமிழ் சுருக்கெழுத்தை ஆரம்பித்த 46 வருட வர்த்தக ஆசிரியரால் 1 வருட, 6 மாத சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக எண் கணிதம், பொருளாதார [ஆங்கில / தமிழ்] வகுப்புக்கள் 1-1-68ல் ஆரம்பமாகும். உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை / உடுப்பிட்டி. 2198

### இலவசம்

மில்க்வைற் பார் சோப் மேலுறைகள் ஐந்து சேகரித்து தருபவர்களுக்கு 31-1-1968 வரை ஓர் அழகான காந்திய நிதிக் கலண்டர் இலவசமாக வழங்கப்படும். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2007

### விற்பனைக்கு

அச்சகம்

யாழ் நகரில் நல்ல நிலைமையில்வேலைசெய்துகொண்டிருக்கும் அச்சகம் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். ம. தேவேஸ்வரன், 18. ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம். போன்: 586 2008

நாவலர் வீதியிலிருக்கும் கோவிந்தபிள்ளைமோட்டார் வேர்க்ஸ் என்னும் தொழிற்சாலை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, இ. கோவிந்தபிள்ளை, 86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல. 278. 2585

## கம்யூனிஸ்ட் கிளை கூட்டம்

யாழ்ப்பாணம், செவ். கம்யூனிஸ்ட் [ரஷ்யசார்பு] வாலிபர் சங்க நல்லூர்க் கிளைக்கூட்டம் தலைவர் எஸ். செந்தில்வேல் தலைமையில் நல்லூரில் நடைபெற்றது.

வெள்ளநிவாரணத்துக்குக்கொடுத்த கூப்பன் அரிசிக்கு கூப்பன் புள்ளி வெட்டப்பட்டதைக் கண்டித்தும், தொழிற்சங்கங்கள் நடத்தும் வேலை நிறுத்தப்போராட்டத்திற்கு பூரண ஆதரவு தெரிவித்தும், சர்வகலாசாலை மாணவர்களுடைய கோரிக்கைக்கு நீதிவழங்கப்பட வேண்டுமென்றும் கோரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. [நி]

## 'ஜிப்சம்'சல் கப்பல்

காங்கேசன்துறை, திங்கள் காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலைக்கு உபயோகிக்கப்படும் ''ஜிப்சம்'' கல்லுக் கப்பல் யாழ்ப்பாணம் வருகிறது.

'ஜிப்சம்' தட்டுப்பாடைத் தொடர்ந்து 7,500 தொன் நிறையுடன் ஜனவரி மாதம் 14-ந் திகதி இக்கப்பல் யாழ்ப்பாணம் வந்துசேரும்.

## 'அனுமதியோம்'

நாத்தாண்டியா, திங்கள் 'இந்நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்கும் செயல்களையும், ஏதுமறியாத பாமர மக்களுக்குத்துன்பம் செய்வதையும் நாம் அனுமதிக்க மாட்டோம். நாட்டின் முன்னேற்றத்தையும் ஐக்கியத்தையும் உண்டாக்குவதே எமது கொள்கை. இதற்கான நடவடிக்கைகளைஎடுப்போம்.'

இவ்வாறு நாத்தாண்டியா இடைத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பிரதமர்தெரிவித்தார்.

ஐ.தே. கட்சி அபேட்சகர் திரு. கியூ. பெர்னண்டோ நல்ல அரசியல் வாதி என்றும், நாத்தாண்டியா மக்களுக்குமட்டுமன்றி தேசத்திற்கே சேவை செய்யக்கூடியவர்என்றும்திரு. பிலிப் குணவர்த்தன தெரிவித்தார்




அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
மருந்துக்கடை
[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகம் திரும்பும் இந்தியர்

# புனர்வாழ்வுக்கான வழிமுறைகள்

சென்னை, டிச. 24

இந்துயாவுக்கு. இலங்கையிலிருந்து — சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் திரும்ப விருப்பவர்கள் அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்கு மேல் இந்தியாவுக்குத் திரும்ப ஆரம்பிப்பார்களென்று இப்பொழுது எதிர்பார்க்கப்படுகின்றது. தாயகம் திரும்பும் இந்திய வம்சாவழியினரின் புனர் வாழ்வுக்கான வழிமுறைகளை ராஜ்ய அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தியா திரும்பும் மக்கள் புனர்வாழ்வுத் திட்டங்களுக்குப்போய்ச் சேர்வதக்கு முன் தங்குவதற்காக வரவேற்பு முகாம்கள் நிறுவப்படும். இந்த முகாமகளில் இந்தமக்கள் அதிகநாட்களுக்கு தங்கவேண்டியிருககாது.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வருகிறவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் உள்ள உபரி இடங்களையும் இலங்கை பர்மா ஆகிய நாடுகளில் இருந்து திரும்பி வருகிறவர்களுக்காக உபயோகிக்க மத்திய அரசாங்கம் முடிவுசெய்திருக்கின்றது.

## பஸ் ஊழியர் கஷ்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை பஸ் டிப்போவிலுள்ள தண்ணீர் பம்ப் பழுதடைந்து விட்டதால் கடந்த சில வாரங்களாக பஸ் ஊழியர்கள் தண்ணீர் பெறமுடியாமல் கஷ்டமடைந்து வருகின்றனர்.

பஸ்கள் சுத்தம் செய்யப்படாததால் கண்ணுடிகளிலும் ஆசனங்களிலும் அழுக்குப்படிந்துள்ளது. இதனுல் பிரயாணிகள் குறிப்பாக உத்தியோகத்தர்களும், மாணவர்களும் ஆசனங்களில் அமராமல் நின்றுகொண்டே பிரயாணம் செய்கின்றனர்.

அதிகாலை சேவைக்கு செல்வதற்காக இரவில் தங்கியிருக்கும் பஸ் ஊழியர்கள் காலையில் தண்ணீர் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர்.

இத்தண்ணீர்ப் 'பம்பை' திருத்தும்படி பஸ் ஊழியர்கள் பலதடவை மேலிடத்திற்கு அறிவித்ததாகவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை யென்றும் தெரியவருகிறது:

## அம்புலன்ஸ் தீக்கிரை

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறையில் அம்புலன்ஸ் ஒன்று தீக்கிரையாகியது.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சொந்தமான அம்புலன்ஸ் இன்று பிற்பகல் 2 மணியளவில் நோயாளிகளை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று திரும்புகையில் காங்கேசன்துறை பெற்ரோல்நிலயத்தில் பெற்ரோல் நிரப்பிய பின்னர் செலுத்திச் செல்ல, சாரதி முயன்றபோது தீப்பற்றி எரிந்தது.

8 வயதுச் சிறுவன் ஒருவனும், அவனது தாயாரும், சாரதி சொய்ஸாவும், ஆஸ்பத்திரியில் கடமையாற்றுபவர்களான வி. எஸ். வேலுப்பிள்ளை, காசிப்பிள்ளை, ரி. நாகமுத்து ஆகிய 6 பேரும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

20ந் தேதி கொழும்பில் இருந்து திருத்தப்பட்டுவந்த இந்த அம்புலன்ஸ் நேற்று முன்தினமே சேவையில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

தொலைபேசித் தொடர்பு இல்லாமையால் காங்கேசன்துறைப் பொலிஸார் பலாலி விமான நிலயம் சென்று நெருப்பணைக்கும் படையினரைக் கொண்டுவந்தனர். சிறிது நேரம் மேலும் தாமதித்திருந்தால் பெற்ரோல் நிலயம் தீப்பற்றியிருக்கும் எனச் சொல்லப்படுகிறது.

## இலங்கைக்கு கௌரவம்

லண்டன், டிச. 24

லண்டனிலுள்ள ஒரு பிரபல உணவுச்சாலையிலுள்ள ஒரு அறைக்கு இலங்கை அழகுக் கன்னி ஒருவரைக் கௌரவிக்குமுகமாக அவரின் பெயரிடப்பட்டுள்ளது.

ஸோஹோவிலிருக்கும் இவ்வுணவுச் சாலையின் பெயர் கே ஹஸ்ஸர். அறையின் பெயர் ஷார்மினி திருச்செல்வம். உலகப் பிரசித்தி பெற்ற இத்தாலிய ஓவியர் அதோனி வரைந்த ஷார்மினியின் ஓவியம் இந்த அறையை அலங்கரிக்கும.

லண்டனில், தம் மணமான சகோதரியுடன் வாழும் ஷார்மினி திருச்செல்வம் அனிகோனிக்கும், சையித்திரிகர் ஆகஸ்டர் ஜோனுக்கும் படம் வரையமுன்னின்றது தெரிந்த விஷயமே.

''எனக்குப் பல காலமாக ஷார்மினியைத் தெரியும். நான் கண்ட பெண்களில் மிக்க அழகு வாய்ந்தவளாக இருந்தமையால் தான் என் உணவுச் சாலையில் ஒரு அறைக்கு அவள் பெயரைச் சூட்டினேன்'' என்று கே ஹஸ்ஸரின் உணவுச் சாலை மனேஜர் திரு. விக்டர் லோஷி கூறினர்.

## மீன் வலையை தின்ற மாடு!

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் சத்தியக்காட்டைச்சேர்ந்த எஸ். அன்னமுத்துஎன்பவருக்கு சொந்தமான மாடு அதே இடத்தைச் சேர்ந்த கே. ஆழ்வான் என்பவருக்கு சொந்தமான மீன்பிடி வலையை துண்டுதுண்டாகச் சேதம் செய்ததுடன் உணவாகவும் சில பகுதிகளைத் தின்றுவிட்டதாம். ரூபா 140-00 பெறுமதியான இவ்வலையை நேற்றுக்காலை பொன்னுலைக் கடலில் மீன் பிடித்துவிட்டு, தமது வளவில் காயப்போட்டபோதே கட்டாக்காலி மாடு அவ் வலையை பதம் பார்த்தது. வலைச்சொந்தக்காரர் மாட்டைமாட்டுச் சொந்தக்காரரிடம் ஒப்படைத்து வலைக்குரிய நஷ்டத்தை பெற்றுக்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கைகூடாததால் சங்கானைப் பொலிஸாரிடம் மாட்டையும் சேதப்பட்டவலையையும் ஒப்படைத்துள்ளார். இது சம்பந்தமாக சுழிபுரம் கிராமசபைத் தலைவருக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## இந்திரா பேசிய கூட்டத்தில் வெடிவிபத்து

சாந்திநிகேதன், டிச. 24

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா இன்று சாந்திநிகேதனில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிக்கொண்டிருக்கையில் சிலரால் கொளுத்தப்பட்ட பட்டாஸ் வெடி கூட்டத்தில் கலந்துகொண்ட இருவரை காயத்துக்குள்ளாக்கியது.

இந்த வெடி சில விஷமிகளால் வேண்டுமென்றே கொளுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டுள்ளது.

## பாரத தூதுகோஷ்டி இலங்கை வரும்

புதுடில்லி, டிச. 24

தேயிலையின் விலையை உலக மார்க்கட்டில் சமப்படுத்துவது சம்பந்தமாக இலங்கையுடன் கூட்டு முயற்சி மேற்கொள்ளும் திட்டத்தில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பாரதத்திலிருந்து தூதுகோஷ்டி ஒன்று அடுத்த வாரத்தில் இலங்கை செல்லவிருக்கிறது.

## கிளர்ச்சிநீங்கி அமைதி

சென்னை, டிச. 24

ஒருரு தினங்கள் தமிழ்நாட்டில் நடைபெத்த இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சி — ஆர்ப்பாட்டங்கள் இன்று அமைதியடைந்துள்ளன.

ரயில்வே நிலயங்கள் எதிலும் அசம்பாவிதங்கள் எதுவும் இன்று பிற்பகல்வரை ஏற்பட்டதாக செய்தி கிடைக்கவில்லை.

நேற்றுமுன்தினம் கொச்சியிலிருந்துவந்த ரயில் பெட்டிகள் எரிக்கப்பட்டது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டவர்களில் எவரும் மாணவர்கள் இல்லையென்று பொலிசார் அறிவித்துள்ளனர்.

## பாராளுமன்ற...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டுச்சேரும்படி பகிரங்கமாக வேண்டுகோள்விடுக்கிறேன். பெரும்பான்மையினரான சிங்கள மக்கள், சிறுபான்மையினருக்கு உதவி செய்யாது, சோஷலிஸத்தை உருவாக்கமுடியாது.

திரு. என். சண்முகதாசன் பேசும்போது, புரட்சி மூலமே மக்கள் உரிமையை பெறமுடியுமென்றும், தொழிலாளரும், விவசாயிகளும் ஒற்றுமைப்பட வேண்டுமென்றும் கூறினர்.

## வேலை நிறுத்த நிலைமை

கொழும்பு, ஞாயிறு

மலைநாட்டுத் தோட்டப் பகுதிகளில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த பலர் வேலைக்குத்திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி, குருநாகலை ஆகிய இடங்களிலுள்ள தோட்டங்களில் இப்போது வேலை சீராக நடைபெற்றுவருவதாகவும் மற்றத் தோட்டங்களிலும் மாமூல் நிலைமை விரைவில்ஏற்படும் அறிகுறிகள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### வர்த்தக ஊழியர்

கொழும்பில் 30 வர்த்தக ஸ்தாபனங்களின் ஊழியர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம்செய்துவருகிருர்கள்.

### தந்தி தொடர்பு ஊழியர்

தந்தி டெலிபோன்தொடர்பு ஊழியர்கள் 27-வது நாளாகத் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்துவருகிருர்கள்.

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45 p.m. Poya days & publicHolidays at 10-30AM
Edd Byrnes - Chris Noel
in
BEACH BALL
(Technicolor) (Scope)
Coming Shortly
JIM REEVES
in
KIMBERLEY--JIM

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.-ஜெமினி
நடித்த
முகராசி

REGAL JAFFNA
4-45, 7-00 & 9-45 P.M.
Pedrio Armendariz
in
SONS OF THUNDER
[in color]

திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [கொழும்பு]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
28-ம் திகதி முதல்
விஜிதா [ஹட்டன்] மொடேர்ன் [பதுளை]
சுந்தரராஜன்
நாகேஷ்
முத்துராமன்
ஜெயலலிதா
ஏ. வி. எம்.ராஜன்
நடிக்கும்
மேஜர் சந்திரகாந்த்



புத்தாண்டை முன்னிட்டு
விசேஷ மலிவு விற்பனை
19 - 12 - 67 — 31 - 12 - 67
கண்கவர் கலர்களில்
உயர்ந்த ரக பட்டு சேலைகளுக்கு
5% வீதம்
விசேஷ கழிவு வழங்கப்படும்.
மற்றும்
உங்களுக்குத் தேவையான எல்லாவகையான
ஜவுளி வகைகளுக்கும்
மிகவும் விலை குறைக்கப்பட்டிருக்கிறது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்ருேம்.
ஆ. அப்பையா அன் கோ.,
82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன் : 506

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 26 ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org